# எனது வளர்ச்சிக்குக் காரணமே தமிழ்நாட்டு மக்கள்தான்!

முதல் பக்கத் தொடர்ச்சி

தெரிந்து கொண்டு, அந்தக் கல்வியைச் சீர்குலைக்க, தேசிய கல்விக் கொள்கையைத் திணித்தால் இவர்கள் கீழே சென்றிடுவார்கள் என்று நினைத்தார்கள்... ஆனால், நாம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை! அதனால் உடனே நிதி தரமாட்டோம் என்று சொல்கிறார்கள்... நான் வேதனையோடு சொல்கிறேன், பள்ளிக் குழந்தைகள் – ஆசிரியர்களுக்காகச் சம்பளம் தர்ற நிதியில் கூட, கைவைக்கும் அளவுக்குக் கொடூரமானவர்கள் கையில் இந்தியா சிக்கியிருக்கிறது!

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் என்ன சொல்கிறார்? “தேசிய கல்விக் கொள்கையைத் தமிழ்நாடு ஏற்றுக் கொண்டால்தான் நிதி விடுவிக்கப்படும். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் நிதி ஒதுக்கச் சட்டத்தில் இடமில்லை” என்று மிரட்டுகிறார்!

நான் கேட்கிறேன், எந்தச் சட்டத்தில் இப்படி இருக்கிறது? மும்மொழிக் கொள்கையை அனைத்து மாநிலங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கிறதா? இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமா அது? உங்களுக்கு ஒரு நீட் தேர்வையே குற்றச்சாட்டு களுக்கு இடமளிக்காத வகையில் நடத்தத் தெரியவில்லை. நீங்கள் தமிழ்நாட்டுக்கு அட்வைஸ் செய்கிறீர்களா? பெயர்தான் தர்மேந்திர பிரதான்! ஆனால், தருமமே உங்களிடம் இல்லையே!?

**தமிழ்நாடு வளர்ந்ததற்கு இருமொழிக் கொள்கையே காரணம்!**

நம்முடைய குழந்தைகளின் கல்விக் கனவைச் சிதைக்கும் காரியத்தை தர்மேந்திர பிரதான் செய்ய, அதைக் கண்டிக்காமல், தடுத்து நிறுத்தாமல், பிரதமர் மோடி வேடிக்கை பார்க்கிறார். இதுதான் ஒரு பிரதமருக்கு அழகா? பிரதமர் அவர்களே, இந்தியை எங்கள் மேல் திணிக்கா தீர்கள்... எங்களுக்குத்தாய்மொழியான தமிழும் – உலகத்துடன் தொடர்பு கொள்ள ஆங்கிலமும் போதும்... தேவைப்பட்டால் இந்தி என்ன? கிரேக்கம் – இலத்தீன் மொழிகளைக்கூட அறிவியல் – தொழில்நுட்பம் மூலம் கற்றுக்கொள்ளப் போகிறோம்...

இன்றைக்குத் தமிழ்நாடு இப்படி வளர்ந்திருக்கக் காரணம், நாம் தேர்ந்தெடுத்த இருமொழிக் கொள்கைப் பாதை! இந்தச் செய்திகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, நான் முரசொலியில் கட்டுரை எழுதி, அதனை நான் ட்வீட் போட்டால், எனக்கு வரும் பதில்களில், வடமாநிலத்தைச் சேர்ந்த பலரும் நம்முடைய நியாயத்தைப் உணர்ந்து, நமக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள்...

ப்ரித்திக் என்பவரின் ட்வீட் என்ன தெரியுமா? “தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வது சரிதான்... இந்தி மொழியால் என்னுடைய மைதிலி மொழி காணாமல் போய்க் கொண்டு இருக்கிறது” என்று எழுதியிருக்கிறார்... அவின் என்பவர், “என்னுடைய தாய்மொழி மகதி! நான் ஸ்டாலினின் கருத்துகளுடன் ஒத்துப்போகிறேன். எங்களுடைய இளைய தலைமுறையால் மகதி மொழியைப்பேசவோ–புரிந்துகொள்ளவோ முடியவில்லை... இந்தித் திணிப்பைத் தடுங்கள்” என்று எழுதியிருக்கிறார்! இப்படி ஏராளமான பேர், இந்தி மொழியின் திணிப்பால் தங்களின் தாய்மொழிகள் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள்! இப்படி, அனைத்துக்கும் முன்னோடியாகவும் – அனைவருக்கும் வழிகாட்டியாகவும் இருப்பதுதான் நம்முடைய தமிழ்நாடு!

**தமிழ்மொழிக்காக எதையும் சந்திக்கத் தயார்!**

எனவே, எங்களை என்ன மிரட்டினாலும், உங்களால் இந்தி மொழியைத் திணிக்க முடியாது! மிரட்டினால், அஞ்சி நடுங்கிக் கூழைக்கும்பிடு போடுவதற்கு, அ.தி.மு.க. என்ற நினைத்தீர்களா? இது தி.மு.க.! மிரட்டினால், அடங்கிப் போகிறவர்கள் இல்லை; அடக்க நினைப்பவர்களை அடங்கிப் போக வைப்பவர்கள்! தமிழ்நாட்டுக்காகவும், தமிழ்மொழிக்காகவும் எத்தகைய அடக்குமுறையையும் எதிர்க்கும் துணிச்சல் கொண்டவர்கள் நாங்கள்! இங்கு இருக்கும் நாங்கள் தமிழர்கள்! சுயமரியாதையுள்ள திராவிடர்கள்!

ஒன்றிய அரசு இப்போது என்ன நினைக்கிறார்கள்? இப்படி அறிவுப்பூர்வமாக – முற்போக்குச் சிந்தனையுடன் பேசுகிறார்களே! இங்கு மட்டுமல்ல, நாடாளுமன்றத்திலும் முழங்குகிறார்களே! இவர்களை எவ்வாறு தடுக்கலாம் என்று பார்த்தார்கள்... அதற்குத்தான், இப்போது தொகுதி மறுசீரமைப்பு கொண்டு வரப்போகிறார்கள்! நம்முடைய தொகுதிகளின் எண்ணிக்கையை – நம்முடைய பிரதிநிதித்துவத்தைக் குறைக்க நினைக்கிறார்கள்... அதனால்தான் முன்கூட்டியே இந்தப் பிரச்சினையை நாம் இப்போது கையில் எடுத்து இருக்கிறோம்.

**பிரதமர் மோடி எழுத்துப்பூர்வமாக உறுதிமொழி தர வேண்டும்!**

ஏற்கெனவே, பிரதமர் மோடி புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்த போது, என்ன சொன்னார்? எதிர்காலத்தில் எம்.பி.க்களின் எண்ணிக்கை அதிகமாகப் போகிறது என்று பேசினார்... ஒன்றிய உள்துறை அமைச்சர் என்ன சொன்னார்? மகளிர் இடஒதுக்கீடு மசோதா கொண்டுவந்த போது, 2024 தேர்தலுக்குப் பிறகு தொகுதி மறுவரையறை இருக்கும் என்று சொன்னார். நாம் இப்போது கேள்வியெழுப்பிய பின்னர், இப்போது என்ன சொல்கிறார்கள்? பொத்தாம் பொதுவாக, தமிழ்நாட்டுக்குத் தொகுதிகள் குறையாது என்று சொல்கிறார்கள்! மற்ற மாநிலங்களுக்கு அதிகரிப்பார்களா? தெரியாது!

நாங்கள் கேட்கும் கேள்வி, நாட்டின் வளர்ச்சிக்காக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்கள் ஏன் பாதிக்கப்பட வேண்டும்? “மற்ற மாநிலங்களுக்கு மக்கள்தொகை அடிப்படையில் அதிகரிக்காது” என்று ஏன் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? முன்னாள் பிரதமர்கள் நேரு அவர்களும் – வாஜ்பாய் அவர்களும் உறுதி கொடுத்தது போன்று, பிரதமர் மோடி ஏன் உறுதி கொடுக்க மாட்டேன் என்கிறார்?

> **நா**ன் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன்... இது, நான் நினைத்துப் பார்க்காத இடம்... இது, நான் நினைத்துப் பார்க்காத உயரம்! இந்த இடத்துக்கு என்னை அழைத்துக் கொண்டு வந்தவர்கள், உடன்பிறப்புகளான நீங்கள்தான்! கோபாலபுரம் நான் பிறந்த இடமாக இருந்தாலும் – தமிழ்நாடு முழுவதும்தான் என்னை வளர்த்தது! ஏன் என்றால், 60 ஆண்டுகாலமாகத் தமிழ்நாட்டில் கிழக்கு – மேற்கு, வடக்கு – தெற்கு, கிராமம் – நகரம், குறுக்கு – நெடுக்கு, வெயில் – மழை, இரவு – பகல், பசி – தூக்கம் பார்க்காமல், ஓடியாடி உழைத்து, கருப்பு – சிவப்புக் கொடியை ஏற்றியதால்தான், கோட்டையில் கொடியேற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது! ஓயாமல் உழைத்த தலைவர் கலைஞரின் வழித்தடத்தில், நானும் ஓயாமல் உழைக்கிறேன். தலைவரான பிறகும் உழைக்கிறேன்... முதல்வரான பிறகும் உழைக்கிறேன்! அண்ணாவின் தம்பிக்குக் – கலைஞரின் உடன்பிறப்புக்கு ஓய்வும் இல்லை; சாய்வும் இல்லை என்ற எண்ணத்துடன் உழைக்கிறேன்! அதனால், இதுபோன்ற பிறந்தநாள் விழாக்கள் நெடுஞ்சாலைப் பயணத்தில் வரும் ஸ்பீட்– பிரேக் போல; ஒரு நிமிட ஓய்வு; அவ்வளவுதான்!

பிரதமர் அவர்களே... எங்களுக்கு எழுத்துப்பூர்வமாக உறுதி கொடுங்கள்! “இப்போது இருக்கும் மக்கள் தொகை அடிப்படையில், தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படாது... 1971 மக்கள் தொகை அடிப்படையில், தமிழ்நாட்டுக்குரிய பிரிதிநிதித்துவம் கிடைக்கும்! தமிழ்நாட்டுக்குப் எந்த பாதிப்பும் ஏற்படாது!” என்று உறுதி கொடுங்கள். இன்றைக்குத் தமிழ்நாடு எழுப்பியிருக்கும் இந்த உரிமைக்குரலை, தெலங்கானா – கர்நாடகா – எதிரொலித்துக் கொண்டு இருக் கிறார்கள்... அவர்களுக்கு என்னுடைய நன்றி! மற்ற மாநிலங்களும் நியாயத்துக்காக வும் – உரிமைக்காகவும் குரல் கொடுக்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்!

## கொடிய சக்திகளிடமிருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்றும் கூட்டணி இது!

இன்றைக்கு நாம் விழிப்புடன் இருந்து, நம்முடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவில்லை என்றால், எதிர்காலத்தில் இனி ஒருபோதும் தமிழர்களின் கையில் அதிகாரம் வராது! தமிழர்களின் சொல்லுக்கு மரியாதையே இருக்காது! அதனால்தான், காலையில் நான் வெளியிட்ட வீடியோவில், உடன்பிறப்புகள் எல்லாம், இந்தச் செய்தியை அனைவருக்கும் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்...

இங்கே கூட்டணிக் கட்சியினர் அனைவரும் வந்திருக்கிறீர்கள்... நீங்கள் இது சம்பந்தமாகத் தொடர்ந்து கூட்டம் போட்டுப் பேசி, இது பற்றிய விழிப்புணர்வைக் கடைக்கோடி மனிதருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்! மார்ச் 5–ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு நான் அழைப்பு விடுத்திருக்கிறேன்... அதில் கட்சிப் பாகுபாடு இல்லாமல் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்... பிரதான எதிர்க்கட்சி அ.தி.மு.க. கலந்து கொள்ளும் என்ற செய்தி வந்திருக்கிறது. மகிழ்ச்சி!

**நாம் விழிப்புடன் இல்லையென்றால் தமிழர்களின் சொல்லுக்கும் மரியாதை இருக்காது!**

சிலர், கலந்து கொள்ள மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள்... நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், இன்றைக்கு பா.ஜ.க.வை மகிழ்விக்க நீங்கள் செய்யும் சுயநல அரசியலால் தமிழ்நாட்டுக்குத் தீங்குதான் ஏற்படும்! பா.ஜ.க.வை நம்பி சென்றவர்கள், அவர்களின் தேவை தீர்ந்தவுடனே மற்ற மாநிலங்களில் என்ன ஆனார்கள் என்று நீங்களே சிந்தித்துப் பாருங்கள்...

**நமக்கான அடையாளத்தை இழக்காமல் காப்போம்!**

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கும் பா.ஜ.க.வினருக்கும் சேர்த்து நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இந்த விவகாரத்தில் தமிழ்நாட்டுக்குத் துணையாக நில்லுங்கள்... தயவு செய்து உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யாதீர்கள்! நாம் அனைவரும் ஓரணியில் இருக்கிறோம் என்று மற்ற மாநிலங்களுக்குக் காட்ட வேண்டும்! அதுமூலமாகத்தான் வர இருக்கும் ஆபத்த தடுத்து, நம்முடைய உரிமையை வென்றெடுக்க முடியும்! வென்றெடுத்தால்தான், எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியும்! நம்முடைய குழந்தைகளின் எதிர்காலத்துக்காக நாம் இதைச் செய்தே ஆக வேண்டும்! இதில் தவறிவிட்டோம் என்றால், நமக்கான அடையாளமே இல்லாமல் போய்விடும்!

எனவே, நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்... நாம் அனைவரும் ஒற்றுமையாக ஒரே அணியில் இருப்போம்! தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாப்போம்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

---

தமிழர்களுக்கு மொழியுணர்வு பற்றி

# ஆளுநர் ஆர்.என்.ரவி பாடம் எடுக்க வேண்டாம்!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



சென்னை, மார்ச் 2 -

தமிழ் - தமிழ்நாடு தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றின் மீது தொடர்ந்து வெறுப்பை உமிழும் ஆளுநர் ரவி தமிழர்களுக்கு மொழியுணர்ச்சியை பற்றி பாடம் எடுக்க வேண்டாம் என்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு பொருளாதாரத்திலும் கல்வியிலும் பெற்றிருக்கும் வளர்ச்சியை பொறுக்க முடியா மல் தமிழ்நாட்டின் மீது வெறுப்பை உமிழ்வதையே தனது கடமையெனக் கருதி செயலாற்றி வருகிறார் ஆளுநர் ரவி.

தனது அரசியலமைப்பு கடமைகளை மறந்து ஆதாரமற்ற அவதூறுகளை வைத்து தமிழ்நாட்டை இழிவுப்படுத்தும் அரசியலை செய்வதற்காகவே ஒன்றிய பாஜக அரசு ஆர்.என்.ரவியை ஆளுநராக வைத்திருக்கிறது.

தனது சமூக வலைதளக் கணக்கை இதற்காகவே பிரதானமாக பயன்படுத்திவரும் ஆளுநர் ரவி தனது இன்றையப் பதிவில் “இந்தப் பகுதி, மனித ஆற்றல் மற்றும் இயற்கை வளங்களால் நிறைந்துள்ளது, ஆனாலும் இது புற க்கணிக்கப்பட்டு பின்தங்கியுள்ளது போன்ற உணர்வைத் தருகிறது. தொழில்மயமாக்கலுக்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் இருந்தபோதி லும், இங்குள்ள மக்கள் வாய்ப்புகள் புறக்கணிக்கப் பட்டவர்களாக உணர்கிறார்கள்” எனக் கூறியி ருக்கிறார்.

தமிழ்நாடு எதில் பின் தங்கியுள்ளது என ஆளுநர் ரவியால் சொல்ல முடியுமா?

கல்வியில், மருத்துவத்தில், பொருளாதாரத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சி இந்திய மாநிலங்கள் எதனோடும் ஒப்பிட முடியாத அளவிற்கு வளர்ச்சியடைந்திருக்கிறது என்பதை ஒன்றிய அரசு வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்களே சொல்லும், அதையெல்லாம் ஆளுநர் ரவி படித்தால்தானே? படித்தாலும் தமிழ்நாட்டின் மீது வெறுப்பேறிய கண்களுக்கு அவையெல்லாம் எப்படித் தெரியும்?

தமிழ்நாடு அடைந்திருக்கும் வளர்ச்சி இருமொழிக் கொள்கையினால் சாதித்தவை, தமிழ்நாட்டில் எப்படியாவது இந்தியை திணிக்கலாம் அதற்கு புதிய கல்விக் கொள்கையை ஒரு வழியாக வைத்து உள்நுழையலாம் எனும் ஆதிக்கவாதிகளின் சதியை அறியாதவர்களா தமிழர்கள்?

தமிழ்-தமிழ்நாடு-தமிழ்த் தாய் வாழ்த்து ஆகியவற்றின் மீது தொடர்ந்து வெறுப்பை உமிழும் ஆளுநர் ரவி தமிழர்களுக்கு மொழியுணர்ச்சியை பற்றி பாடம் எடுக்க வேண்டாம்.

சனாதனத்தையும் சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டில் காலூன்றச் செய்திட குட்டிக்கரணம் போடும் ஆளுநரின் நடவடிக்கைகள் தமிழ் மண்ணில் வேறூன்றவில்லை. அப்படித்தான் மும்மொழி கொள்கையும் மூக்கறுபட்டு நிற்க போகிறது.

மொழித் தேர்வு எது? மொழித் திணிப்பு எது? என்பது எங்களுக்கு தெரியும், இந்த நாடகங்கள் எல்லாம் இங்கே எடுபடாது.

இவ்வாறு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.


---

திருநெல்வேலி மாவட்ட - கழக மூத்த முன்னோடி

# கவிஞர் குமார சுப்பிரமணியன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 2–



திருநெல்வேலி மாவட்டக் கழக மூத்த முன்னோடியும், மாவட்ட இலக்கிய அணித் தலைவராகவும் பொறுப்பு வகித்த கவிஞர் குமார சுப்பிரமணியன் (வயது 86) அவர்கள் நேற்று முன்தினம் (28.2.2025) இயற்கை யெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

திருநெல்வேலி மாவட்டக் கழக மூத்த முன்னோடியாக விளங்கிய கவிஞர் குமார சுப்பிரமணியன் அவர்கள் நேற்று மறைவுற்றார் என்ற செய்தியறிந்து வருந்துகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தனது இளம் வயது முதல் கழக உறுப்பினராக இருந்து இன்று வரை இயக்கப் பணியை திறம்பட செயலாற்றியவர், திராவிட இயக்க – கொள்கையில் கவிதைகளை புனையக் கூடிய ஆற்றல்மிக்கவர். மாவட்ட இலக்கிய அணித் தலைவராகவும் பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றிய கவிஞர் குமார சுப்பிரமணியன் அவர்களின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கும், அப்பகுதி கழகத்தினருக்கும் பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அப்பகுதி கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

உள்ளாட்சி மன்றங்களில் உரிய பிரதிநிதித்துவம் அறிவித்ததற்கு

# மாற்றுத்திறன் தோழர்கள் நன்றி கூறியது எனது பிறந்தநாள் பரிசு!

## சமூக வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச் 2–

மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கு மாற்றுத்திறன் கொண்ட தோழர்கள் நன்றி தெரிவித்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்திட, “உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில், உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும்” என நேற்று அறிவித்தேன்!

இன்று, மாற்றுத்திறன் கொண்ட தோழர்கள் என்னை அரவணைத்து – கைகளை இறுகப்பற்றிக் கொண்டு, “நன்றி” என்றபோது, என் பிறந்தநாள் பரிசைப் பெற்றதாக உணர்ந்தேன்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் நன்றி!

## சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, மார்ச் 2-

இதுகுறித்து ரெ.தங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையையும் தனது நேரடி கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயலாக்கம் செய்து மாற்றுத்திறனாளிகளின் இதயங்களின் வாழ்ந்து கொண்டு வருகிறார் என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் கடந்த 30 ஆண்டு காலமாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில், மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக பணிகளை செவ்வனே செய்து வருவதுடன், மாற்றுத்திறனாளிகளிடையே கழக களப் பணிகளையும் செய்து வருகிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில் மாற்றுத்திறனாளிகளுக்கு மேலும், ஒரு வரலாற்று சிறப்பு மிக்க அம்சமாக மாற்றுத்திறனாளிகள் சமூகம் “உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் பிரதிநிதித்துவம்” வழங்க சட்டமன்றத்தில் சட்ட திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்படும், என அறிவித்த மாற்றுத்திறனாளிகளின் காவலர், தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதுடன் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கும் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தனது அறிக்கையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம் நன்றியும், பாராட்டும் தெரிவித்துள்ளார்.

---

கழகப் பொதுக்குழு உறுப்பினர்

# சைதை சம்பத் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, மார்ச் 2 -

கழக பொதுக்குழு உறுப்பினர் சைதை சம்பத் நேற்று முன்தினம் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்ததும் கழகத்தினர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை கிழக்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜா சம்பத்தின் தந்தையும் கழக பொதுக்குழு உறுப்பினரும் சைதைப் பகுதிக் கழக முன்னோடியும் முன்னாள் டி.யு.சி.எஸ். தலைவருமான சைதை சம்பத் நேற்று முன்தினம் (28.2. 2025) பகல் 1 மணி அளவில் மறைவெய்தினார்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (1.3.2025 சனிக்கிழமை) மாலை 4.00 மணிக்குமேல்

எண். 16/48, சூடியம்மன் தெரு, சைதாப் பேட்டை, சென்னை15. எனும் முகவரியில் இருந்து கண்ணம்மாபேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தகவல் அறிந்ததும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதிச் செயலாளர்கள் இரா. துரைராஜ், எம்.கிருஷ்ண மூர்த்தி, எஸ்.குணசேகரன், மின்னல் கந்தப்பன், எம். ஸ்ரீதரன் உள்ளிட்ட வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

---

விழுப்புரம் மத்திய மாவட்டம்

# மாவட்டப் பிரதிநிதி பி. சக்கரபாணி மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 2–

விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் நகரக் கழகம் - மாவட்டப் பிரதிநிதி பி.சக்கரபாணி (வயது 59) அவர்கள் நேற்று முன்தினம் இயற்கையெய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் நகரக் கழகத்தில் மாவட்டப் பிரதிநிதி பி.சக்கரபாணி அவர்கள் உடல்நலக் குறைவால் நேற்று மறைவுற்றார் என்ற செய்தியறிந்து வருந்துகிறேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அப்பகுதி கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.